**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**
**முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**
**நீதித்துறை நடுவர், திருவையாறு**

**2026ஆம் வருடம் மார்ச் திங்கள், 18–ஆம் நாள், புதன்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.460/2025**
(தாய் வழக்கு எண்.16/2018)
(CNR NO: TNTJ–160000–442018)

**அரசுக்காக:–**
**காவல் ஆய்வாளர்,**
**மருவூர் காவல் நிலையம்,** ...குற்றமுறையிடுபவர்
(குற்ற எண்.116/2017)

//எதிராக//

**செந்தில்நாதன், வயது 28/2026**
**த/பெ. மாரியப்பன்,**
**வள்ளுவர் தெரு,**
**ராமானுஜபுரம்,**
**சோழபுரம், திருப்பனந்தாழ் தாலுக்கா,**
**தஞ்சாவூர் மாவட்டம்.**
(இந்நீதிமன்ற சி.ஆர்.எம்.பி. எண்.3443/2025–ல் 17.12.2025–ஆம் தேதிய உத்தரவின்பேரில் இந்த எதிரிக்கு எதிரான வழக்கு மட்டும், தாய் வழக்கில் இருந்து சிசி.460/2025 என தனியாக பிரிக்கப்பட்டுள்ளது.) ...எதிரி

| மாண்புமிகுசென்னைஉயர்நீதிமன்ற07.04.2021 நாளிட்டR.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படிCASE SUMMARY கீழ்கண்டவாறுவிவரிக்கப்படுகிறது | | | | | |
|---|---|---|---|---|---|
| **S.No.** | **CASE SUMMARY** | | | | |
| (i) | **The Period of remand of the accused** | : | **Name of the Accused** | **Date of Remand** | **Released on** |
| | | | 1) Senthilnathan | 12.11.2017 | 14.05.2019 |
| (ii) | **The date of filing of the complaint/final** | : | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | | 27.10.2017 | 09.06.2018 | |

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:20:01 +0530

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **report in the Court** | | | | | |
| (iii) | **The date of committal of the case to the Court of Session** | : | - | | | |
| (iv) | **The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe** | : | 01.11.2018 | | | |
| (v) | **Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code** | : | **Crl.M.P.No.** | | **Date of Filing** | **Result** |
| | | | Crl.MP.No. /2026 U/s. 311 Cr.P.C | | 11.03.2026 | Allowed |
| (vi) | **Date of examination in-chief and cross-examination of a witness** | : | **Name of the Examination** | | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW1 | Thirumoorthy | 21.01.2026 | 21.01.2026 |
| | | | PW2 | Raju | 18.02.2026 | 18.02.2026 |
| | | | PW3 | Gunasekaran | 18.02.2026 | 18.02.2026 |
| | | | PW4 | Jeevanantham | 18.02.2026 | 18.02.2026 |
| | | | PW5 | Pushpam | 11.03.2026 | 11.03.2026 |
| | | | PW6 | Murugadoss (IO) | 11.03.2026 | 11.03.2026 |
| (vii) | **Date of examination of the** | : | 18.03.2026 | | | |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:20:07 +0530

Date:18.03.2026 JM Court, Thiruvaiyaru.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **accused U/Sec 313 of the Code** | | | | |
| (viii) | **Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be; and** | : | - | | |
| (ix) | **Grant of stay by superior Courts and the results thereof** | : | **Sessions Court CMP Numbers** | **High Court No and Date of Stay** | **Result** |
| | | | NIL | | |

| | | |
|---|---|---|
| 1–வதுகுற்றச்சாட்டு | : | எதிரி புகார்தாரரின் கழுத்தில் இருந்த செயினை அறுத்து கொள்ளையடித்த செயலுக்காக இதச.பிரிவு.392–ன் கீழ் |
| எதிரிகளின் பதில் | : | பொய்வழக்கு. |
| நீதிபதியின்தீர்மானம் | : | குற்றவாளி இல்லை என முடிவு. |
| உத்தரவு(அ) தண்டணை | : | 1. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 392–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.<br>2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது.<br>3. இவ்வழக்கில் C.P.No. 32/2018 Item No.1–ல் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான செயினை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ள புகார்தாரர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு முழுவதுமாக வைத்துக்கொள்ளவும், Item No.2–ல் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான TN 68 H |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:20:12 +0530

| | | |
|---|---|---|
| | | 6649 என்ற எண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தை இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ள வாகனத்தின் உரிமையாளர், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு முழுவதுமாக வைத்துக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 09.06.2018–ம் தேதி அன்று ஆண்டுபட்டிகை வழக்கு எண்.16/2018 என இந்த எதிரி மற்றும் மற்றொரு எதிரி மீதும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்ற சி.ஆர்.எம்.பி. எண்.3443/2025–ன் 17.12.2025–ஆம் தேதிய உத்தரவின்பேரில், தாய் வழக்கின் 2–வது எதிரியான இந்த எதிரி மீதான வழக்கு மட்டும் தனியாக பிரித்தெடுக்கப்பட்டு, ஆண்டுபட்டிகை வழக்கு எண்.360/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G. வெங்கடேஸ்வரன், B.E., LLB., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரை என் ஆய்வில் வைத்தும், இந்நீதிமன்றம் வழங்கிடும்

**தீர்ப்புரை**

எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 392–ன் கீழ் திருவையாறு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. கு.வி.மு.ச.பிரிவு.173–ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின்படி வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 26.10.2017–ஆம் தேதி தஞ்சாவூரில் பஸ் ஏறி சாத்தனூர் பஸ் ஸ்டாப் வந்ததும் பஸ்சில் இருந்து இறங்கி, குடியான தெரு வழியாக POST OFFICE க்கு

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:20:24 +0530

நடந்து, வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, சத்துணவு பள்ளிக்கூடத்தின் அருகில், வடக்கிலிருந்து தெற்காக ஊதா நிற பஜாஜ் டிஸ்கவர் TN 68 H6649 எண்ணுள்ள வாகனத்தை இந்த எதிரி ஓட்ட, தாய் வழக்கின் 1–வது எதிரி வண்டியின் பின்னால் உட்கார்ந்து கொண்டும் வந்தபோது, இந்த எதிரி சாத்தனூர் SCHOOL எங்கே இருக்கிறது என்று புகார்தாரரிடம் கேட்டுக்கொண்டிருக்கும்போதே, தாய் வழக்கின் 1–வது எதிரி புகார்தாரர் கழுத்தில் அணிந்திருந்த ரூ.75,000/–ம் மதிப்பிலான சுமார் 5 பவுன் செயினை அறுத்துக்கொண்டு இருவரும் இரு சக்கர வாகனத்தில் சென்றுள்ளார்கள். எனவே, எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 392–ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக மருவூர் காவல் ஆய்வாளர் கு.வி.மு.ச பிரிவு 173–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு.204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச. பிரிவு. 207–ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், எதிரி மீது இ.த.ச. பிரிவு 392–ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு, குற்றச்சாட்டை எதிரிக்கு எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. தாய் வழக்கான சிசி.16/2018–ஆனது விசாரணைக்காக நிலுவையில் இருந்தபோது, தாய் வழக்கின் 1–வது எதிரி தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அந்த வழக்கில் இருந்து இந்த எதிரி மட்டும் சி.ஆர்.எம்.பி.எண்.3443/2025–ல் 17.12.2025–ஆம் தேதிய உத்தரவின்பேரில், இந்த வழக்கு (சிசி.460/2025) என தனியாக பிரிக்கப்பட்டுள்ளது

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:20:29 +0530

3. அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.6** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4. அரசுத்தரப்பு சாட்சியங்களின் படி வழக்கின் சுருக்கம்:–**

புகார்தாரர் கடந்த 27.10.2017–ஆம் தேதி தனது அலுவலகத்திற்கு செல்வதற்காக சாத்தனூர் பேருந்து நிறுத்ததில் இறங்கி நடந்து சென்றுக்கொண்டிருந்தபோது, யாரோ இருவர் இருச்சக்கர வாகனத்தில் வந்தார்கள். புகார்தாரர், தன் மீது வண்டி மோதிவிடக்கூடாது என ரோட்டின் ஓரமாக சென்றார். அவர்கள் புகார்தாரரை சுற்றி வந்து புகார்தாரருக்கு முன்னால் வண்டியை நிறுத்தி, School எங்கு உள்ளது என்று கேட்டார்கள், புகார்தாரர் தனது கையை நீட்டி அங்கு உள்ளது என்று காண்பித்தபோது, இருச்சக்கர வாகனத்தின் பின்புறம் அமர்ந்திருந்த நபர், புகார்தாரரின் கழுத்தில் அணிந்திருந்த 3 1/2 பவுன் தங்கச் செயினை அறுத்து சென்றுவிட்டார்கள். அவர்கள் யார் என்று புகார்தாரருக்கு தெரியவில்லை. அதன் பிறகு காவல் நிலையம் சென்று அ.சா.ஆ.1–புகாரை கொடுத்தார். அதன் பிறகு சிறிது நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் சொன்னதன்பேரில், நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து தங்க செயினை பெற்றுக்கொண்டுள்ளார்.

கடந்த 27.10.2017–ஆம் தேதியன்று 19 மணியளவில் அ.சா.5–புகார்தாரர் கொடுத்த அ.சா.ஆ.3–புகாரை பெற்று காவல் நிலைய குற்ற எண்.116/2017. செச/பி.392 இதச–வின் கீழ் முதல் தகவல் அறிக்கை –அ.சா.ஆ–4 பதிவுசெய்து, அன்றையதினமே ஆய்வாளர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.30 மணிக்கு சம்பவம் இடத்திற்கு சென்று சாத்துனூர் பால்வாடி பள்ளிக்கூடம் அருகே சாட்சிகள் ராஜீ மற்றும் குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர்–அ.சா.ஆ.5

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:20:34 +0530

மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 மற்றும் மகஜர் சாட்சிகள் தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 12.11.2017–ஆம் தேதி காலை 10.00 மணியளவில் தில்லைஸ்தானம் பஸ்டாப் அருகே எதிரிகளை கைது செய்து எதிரி ஜீவகர்ணா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஜீவனந்தம் மற்றும் திருமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து, அதன் அடிப்படையில் அவரிடம் இருந்து 5 பவுன் எடையுள்ள செயின் 1 மற்றும் TN 68 H 6649 என்ற எண் கொண்ட பஜாஜ் டிஸ்கர் ஊதா நிற இருசக்கர வாகனம் ஒன்றையும் சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.7–கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, படிவம் 91–அ.சா.ஆ.8–ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். எதிரிகள் இருவரையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 15.11.2017ஆம் தேதி எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**5.** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, கு.வி.மு.ச.பிரிவு.313(1)(ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் வினவியபோது, எதிரிகள் அவற்றை பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும் பதில் கூறினார். எதிகளின் பதில் பதிவு செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**6 இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

(i) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 392–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:20:38 +0530

(ii) எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?என்பதேயாகும்.

**7. தீர்வு:–**

கடந்த 26.10.2017–ஆம் தேதி சாத்தனூர் சத்துணவு பள்ளிக்கூடத்தின் அருகில், புகார்தாரர் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 5 பவுன் செயினை அறுத்து கொள்ளையடித்து சென்று, எதிரி இ.த.ச. பிரிவு 392–ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக அரசு தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்ற சம்பவம் 26.10.2017–ம் தேதி காலை 10.30 மணிக்கு நடந்ததாக சொல்லப்பட்டு, 27.10.2017–ம் தேதி 19.40 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 01.11.2017–ம் தேதி காலை 11.30 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வழக்கின் புலன் விசாரணை 15.11.2017ம் தேதி முடிவுற்று, குற்ற இறுதியறிக்கை 09.06.2017–ம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரர்–அ.சா.5–ஆகவும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளாக–அ.சா.1, 4 சாட்சிகளும், பார்வை மகஜர் சாட்சிகளாக–அ.சா.2, 3–சாட்சிகளும், புலன் விசாரணை அதிகாரிகள் தரப்பில் உதவி ஆய்வாளர் ஆகியோர் அ.சா.6–ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். ஏனைய சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

புகார்தாரர் கொடுத்த அ.சா.ஆ.1–புகாரில், 27.10.2017–ஆம் தேதி காலை 10.30 மணிக்கு, சாத்தனூர் சத்திரம் பஸ் ஸ்டாப்பில் பஸ்ஸில் இறங்கி, போஸ்ட் ஆபீஸ்க்கு செல்லும் வழியில், சாத்தனார் குடியானத் தெரு, பால்வாடி பள்ளிக்கூடம் அருகே அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள், மோட்டார் சைக்கிளில் வந்து, வண்டியில் இருந்து இறங்காமல், புகார்தாரர் கழுத்தில் இருந்த ஐந்து பவுன் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு மறைந்து சென்றுவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது. அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள்

AGNES JEBA KIRUBA S Digitally signed by AGNES JEBA KIRUBA S Date: 2026.03.18 21:20:42 +0530

என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழக்கு குறித்து விசாரணை செய்து கொண்டிருந்தபோது, 12.11.2017–ஆம் தேதி காலை 10.00 மணிக்கு தில்லைஸ்தானம் பேருந்து நிலையம் அருகில், வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, இரு சக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் இருவரையும் விசாரித்தபோது, தாய் வழக்கின் 1–வது எதிரி ஜீவகர்ணா ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதனடிப்படையில், அவரது சட்டை பையில் இருந்து அவர் எடுத்து ஒப்படைத்த ஐந்து பவுன் செயினை கைப்பற்றியதாக வழக்கில் சொல்லப்பட்டு, புலன் விசாரணை அதிகாரி தரப்பிலும் அவ்வாறே சாட்சியமும் அளிக்கப்பட்டுள்ளது.

புகார்தாரர்–அ.சா.1–ஆக அளித்துளள சாட்சியத்தில், புகார் வாக்குமூல சங்கதி குறித்து சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் முகத்தை தெரியாதவாறு கட்டிக்கொண்டிருந்ததால் எதிரிகள் யார் என்று தன்னால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி ஜீவகருணாவிடமிருந்து சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்று, இந்த வழக்கில் சொல்லப்பட்ட நிலையில் ஒப்புதல் வாக்குமூல சாட்சி அ.சா.1–திருமூர்த்தி, அ.சா.4 –ஜீவானந்தம், தங்கள் சாட்சியங்களில், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தங்களுடையதல்ல என்று சாட்சியம் அளித்து அரசுத் தரப்பிற்கு எதிராக பிறழ் சாடசியாக மாறியுள்ளனர். பார்வை மகசர் சாட்சிகள் அ.சா.2 மற்றும் 3 போலிசார் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

வழக்கில் எதிரிகள், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில், ஒப்புதல் வாக்குமூலம் உரிய சட்ட விதிகளின்கீழ் நிரூபணம் செய்யப்படவில்லை. எதிரி எந்த சாட்சியாலும் அடையாளம் காட்டப்படவில்லை. எனவே எதிரி தான் புகார்தாரரிடமிருந்து நகையை பறித்துச் சென்றார் என்று அரசு தரப்பில் உரிய முறையில் நிரூபணம் செய்யப்படவில்லை.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:20:47 +0530

எனவே, இத.ச பிரிவு 392–ன் கீழான குற்றச் சாட்டைப் பொறுத்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என்று கு.வி.மு.ச. பிரிவு. **248(1)–**ன் கீழ் தீர்மானித்து எதிரியை விடுதலை செய்யலாம் என்று முடிவு செய்கிறது.

இவ்வழக்கில் இந்நீதிமன்ற C.P.No:134/2016–ல் Item–1–ஆக ஒப்படைக்கப்பட்டு இவ்வழக்கின் புகார்தாரரால் இடைக்கால பொறுப்பில் பெற்று செல்லப்பட்ட வழக்கு சொத்தான 5 பவுன் செயின் புகார்தாரருடையது என்று தெரிய வருவதாலும், நீதிமன்றத்தில் இருந்து இடைக்காலமாக மனு செய்து புகார்தாரர் பெற்று சென்றுள்ளதாலும், அதைப் பொறுத்து எதிரி உள்ளிட்ட வேறு யாரும் உரிமை கோராததாலும், இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அ.சா.1 இடைக்காலமாக பெற்று சென்ற செயினை முழுவதுமாக வைத்துக்கொள்ள உத்தரவிடுவதும், Item No.2–ஆக ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான TN 68 H 6649 என்ற எண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தை இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ள வாகனத்தின் உரிமையாளர், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு முழுவதுமாக வைத்துக்கொள்ள உத்தரவிடுவதும், நீதியின்பால் உகந்தது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8. முடிவாக,**

1. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 392–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு.248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:20:51 +0530

Date:18.03.2026 JM Court, Thiruvaiyaru.

3. இவ்வழக்கில் C.P.No. 32/2018 Item No.1–ல் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான செயினை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ள புகார்தாரர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு முழுவதுமாக வைத்துக்கொள்ளவும், Item No.2–ல் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தான TN 68 H 6649 என்ற எண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தை இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ள வாகனத்தின் உரிமையாளர், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு முழுவதுமாக வைத்துக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2025**ஆம் ஆண்டு **டிசம்பர்** மாதம் **18–**ஆம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:20:57 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமூர்த்தி |
| அ.சா.2 | ராஜீ |
| அ.சா.3 | குணசேகரன் |
| அ.சா.4 | ஜீவானந்தம் |
| அ.சா.5 | புஷ்பம் (புகார்தாரர்) |
| அ.சா.6 | முருகதாஸ் (புலன் விசாரணை அதிகாரி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சாஆ.1 | 27.10.2017 | பார்வை மகஜரில் உள்ள 2–வது கையெழுத்து அ.சா.2–ன் உடையது |
| அ.சாஆ.2 | 27.10.2017 | பார்வை மகஜரில் உள்ள 2–வது கையெழுத்து அ.சா.2–ன் உடையது |
| அ.சாஆ.3 | 27.10.2017 | புகார் மனு |
| அ.சாஆ.4 | 27.10.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சாஆ.5 | 27.10.2017 | பார்வை மகஜர் |
| அ.சாஆ.6 | 27.10.2017 | மாதிரி வரைபடம் |
| அ.சாஆ.7 | 12.11.2017 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சாஆ.8 | 12.11.2017 | படிவம் –91 |

**அரசு தரப்பு சான்று பொருள்: இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**–இல்லை.

**சான்றுப் பொருட்கள்:**–இல்லை.

**குறிப்பு:–**

1. எந்த சாட்சியமும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.18 21:21:01 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு